# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2314/48 - 2023 ජනවාරි මස 13 වැනි සිකුරාදා - 2023.01.13

*2314/48 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி. 37/56(vi)*

***1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க, அரச கைத்தொழிற் கூட்டுத்தாபனங்கள் சட்டம்***
***3 ஆம் பிரிவின் கீழான கட்டளை***

*1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க, அரச கைத்தொழிற் கூட்டுத்தாபனங்கள் சட்டத்தின் 3 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு வனசீவராசிகள் மற்றும் வனவளப் பாதுகாப்பு அமைச்சர் மஹிந்த அமரவீர ஆகிய நான், அரசாங்கத்தினது அங்கீகாரத்துடன் மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்டதும் காலத்துக்குக் காலம் திருத்தப்பட்டவாறு அரச அரிமரக் கூட்டுத்தாபனத்தைத் தாபித்தல், 1968 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 4 ஆந் திகதிய 14796 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளைக்கான முதலாவது அட்டவணையை இக்கட்டளை மூலம் நீக்கிவிட்டு அதன்கீழ் முன்பு செய்யப்பட்ட எதற்கும் பங்கம் ஏற்படாதவாறு, அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்துகின்றேன்:-*

**"முதலாம் அட்டவணை**

எந்நோக்கங்களுக்கு அரச அரிமரக் கூட்டுத்தாபனம் உருவாக்கப்பட்டதோ அந்நோக்கங்கள் பின்வருமாறாதல் வேண்டும்:

(1) காடுகளிலிருந்து மரங்களை வெட்டி அகற்றுதல், அத்தகைய மரங்களை அரிமரங்களாகவும் முடிவுப் பொருட்களாகவும் மாற்றுதல், மரக்குற்றிகள், அரிமரங்கள் மற்றும் முடிவுப் பொருட்களை விற்பனை செய்தல் மற்றும் மேற்படி நோக்கங்களுக்காக காட்டுப் பாதைகளை அமைத்தல்;

(2) மரக்குற்றிகளாக்கும் நிலையங்கள், அரியும் ஆலைகள், எண்ணெய் இடுதல் மற்றும் பாதுகாப்புப் பொறித்தொகுதிகள், அரி மரங்களை உலர வைத்தல் மற்றும் உலர வைப்பதற்கான சூளைகள் மற்றும் ஏனைய தேவையான உபகரணங்கள் மற்றும் நிறுவல்களை கையகப்படுத்தல் நிர்மாணித்தல் மற்றும் செயற்படுத்தல்;


1A - G 38574 — 07 (2023/01)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(3) அரிமரங்கள் மற்றும் விறகு விற்பனை நிலையங்களைச் செயற்படுத்தல்;

(4) அரிமரங்களிலிருந்தான ஏதேனும் உபபொருட்களின் உற்பத்தி மற்றும் விற்பனை;

(5) அரிமரங்களை இறக்குமதி செய்தல்;

(6) வன வளர்ப்பு, மீள் காடாக்கம், வனாந்திரங்கள் மற்றும் வன வளர்ப்புகளை விஞ்ஞான ரீதியாக முகாமைத்துவம் செய்தல்;

(7) அரிமரங்களுடன் தொடர்புடைய முடிவுப் பொருட்கள் மற்றும் பகுதியளவு முடிவுப் பொருட்களை ஏற்றுமதி செய்தல்;

(8) தனியார் காணிகளிலிருந்து மரங்களைக் கொள்வனவு செய்தலும் விற்பனை நிலையங்களில் அல்லது சாலையோரங்களில் விற்பனை செய்தலும்;

(9) வனம் சார்ந்த உற்பத்திப் பொருட்களை செயற்படுத்தல்;

(10) பிரம்புகளை இறக்குமதி செய்தல்;

(11) மாதிரியை பரீட்சிப்பதன் மூலம் உள்நாட்டு மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட அரிமர இனங்களை இனங்காணுதல் மற்றும் சான்றழித்தல்;

(12) அரிமரக் கைத்தொழில்துறைசார் விடயங்கள் தொடர்பில் பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்துதல் மற்றும் சான்றிதழ்களை வழங்குதல் மற்றும் சூழல் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை ஒழுங்கமைத்தல்;

(13) கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான காணிகள் மற்றும் கட்டடங்களின் முழுமையான பயன்பாட்டினைப் பெற்றுக் கொள்வதற்காகத் திட்டமிடல் மற்றும் முதலீடு செய்தல்;

(14) வனப் பாதுகாப்பு தலைமையதிபதியின் அனுமதியின்கீழாக, கருங்காலி மரங்கள் பிரதான அரிமரமாக பயன்படுத்தப்படாது அலங்கார நோக்கத்துக்காக மாத்திரம் பயன்படுத்தப்படும் தளபாடங்களின் ஏற்றுமதி;

(15) தனியார் துறையிடமிருந்து மர உற்பத்திகள், மரத் தளபாடங்கள் மற்றும் மர அலங்காரப் பொருட்களை கொள்வனவு செய்தல் மற்றும் விற்பனை செய்தல்;

(16) வெளிநாட்டுக் காட்சியறைகளை உடைய வியாபார தாபனங்களுடனான ஒப்பந்தத்தின் கீழ் தளபாடங்களை ஏற்றுமதி செய்தல்;

(17) நீதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்டுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினால் ஆக்கப்பட்ட பணிப்புரைகளைக் கவனத்திற்கொண்டு, பறிமுதல் செய்யப்பட மரங்கள் மற்றும் மர உற்பத்திப் பொருட்களை களஞ்சியப்படுத்தலும் விற்பனை செய்தலும்; அத்துடன்

(18) நீதிமன்றத்தினால் ஆக்கப்பட்ட பறிமுதலுக்கான கட்டளைகளுக்கமைய அத்தகைய நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட பறிமுதல் செய்யப்படாத மரங்கள் மற்றும் மர உற்பத்திப் பொருட்களை களஞ்சியப்படுத்தலும் விற்பனை செய்தலும்.".

**மகிந்த அமரவீர**,
வனசீவராசிகள் மற்றும் வனவளப்
பாதுகாப்பு அமைச்சர்.

பத்தரமுல்லை,
2023, சனவரி 12.

EOG 01 - 0127

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.